தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 234/ந/2022
நாள் 18.01.2023

திரு. E.கோவிந்தராஜன்,
செங்கல்பட்டு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி. – எதிர் மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி, கிருஷ்ணாபுரம், திருவீதியம்மன் கோவில் தெரு, கதவு எண்.10 என்ற முகவரியில் வசிக்கும் திரு.E.கோவிந்தராஜன் என்பவரின் 18.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.11.2022 அன்று பெறப்பட்டு 234/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி, கிருஷ்ணாபுரம், திருவீதியம்மன் கோவில் தெரு, கதவு எண்.10 என்ற முகவரியில் வசிக்கும் திரு.E.கோவிந்தராஜன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியால் கடைகள் மற்றும் மீன்மார்க்கெட் ஏலம் விடப்பட்டதில் அரசு விதிமுறைகளுக்கு முரணாக சரியான முறையில் விளம்பரங்கள் மற்றும் அறிவிப்புகள் மேற்கொள்ளாமல் தன்னிச்சையாக செயல்பட்டுள்ள நகராட்சி ஆணையர் குறித்து பல்வேறு புகார்கள் அளித்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்படி தகவல்கள் கோரியதில் தகவல்களை சரிவர வழங்காமல் செயல்பட்டுள்ளார்.

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான மொத்த கடைகளும் ஏலம் விடபட்டதில் ஊழல் முறைகேடு நடைபெற்றுள்ளது. கடைகள் ஏலம் விடாமலேயே ஏலம் விட்டதாக அறிவித்து ஏற்கனவே 15 ஆண்டுகளில் இருந்து 20 ஆண்டுகள் வரை கடை நடத்தி வருபவர்களுக்கே கடை மறுபடியும் மறைமுகமாக கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அனைவரிடமும் நகராட்சி ஆணையர் திரு.இளம்பரிதி அவர்கள் இலட்சக்கணக்கில் இலஞ்சம் பெற்றுள்ளார். இவர் இந்நகராட்சி அலுவலகத்திற்கு வந்த பிறகு வீடுகட்ட புதிய பிளான்

கொடுப்பதிலும் இலஞ்சம் பெற்றுள்ளார். அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு அலுவலக புணியை கவனிக்காமல் எப்பொழுதும் போனில் பேசிக்கொண்டே இருக்கிறார்.

இவருக்கு இலஞ்சம் வாங்கிக்கொடுக்கும் ஆதரவாளர்களை மட்டுமே உள்ளே சேர்த்து வைத்துக்கொண்டு பேசுகிறார். வேறு யாராவது வந்தால் வெளியே அமர்ந்து கொண்டிருக்கும் உதவியாளரிடம் சொல்லி ஆணையர் மீட்டிங்கில் இருக்கின்றார் என்று பொய் சொல்ல சொல்கின்றார்.

இவர் இலஞ்சம் வாங்குவதற்காகவே கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு பணியாளர் பாலா (எ) மா.சீனிவாசன் என்பவரை வைத்து பண வசூலில் ஈடுபடுகிறார். அவர் ஏற்கனவே மீன்கடைகளுக்கான வாடகை பணத்தை கையாடல் செய்தவர். மற்றொரு தற்காலிக பணியாளர் வரதன் என்பவரை இலஞ்சம் வாங்கி கொடுப்பதற்காகவே உள்ளே வைத்துள்ளார்.

இது சம்பந்தமாக மண்டல இணை இயக்குநர் அவர்களிடம் 18.08.2022 அன்று புகார் கொடுத்துள்ளோம். அவர் நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை. ஆகவே தாங்கள் இவர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமில்லாமல் நகராட்சி கடைகளை ஏலம் விடாமலேயே ஏலம் விட்டதாக அறிவித்து சட்டத்திற்கு விரோதமாக செயல்பட்டு பழைய நபர்களுக்கே கடையை கொடுத்து இலட்சக்கணக்கில் இலஞ்சம் வாங்கிய ஆணையர் திரு.இளம்பரிதி மீதும் அவருக்கு உறுதுணையாக செயல்பட்டு இலஞ்ச பணம் வசூல்செய்து கொடுக்கும் துப்புரவு பணியாளர்கள் திரு. பாலா (எ) மா.சீனிவாசன் மற்றும் திரு. வரதன் ஆகியோர் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் நந்திவரம்– கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையாளர் தனது 15.12.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான கடைகள் நீண்ட காலமாக ஏலம்விடப்படாமலும், குத்தகைதாரர்கள் வாடகை தொகை செலுத்தாமல் 4 ஆண்டுகளுக்கு மேல் வாடகை நிலுவை வைத்திருந்து, தொடர்ந்து கடைகளை நடத்தி வந்ததாலும் நகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படுவதை கண்டறிந்து அனைத்து கடைகாரர்களையும் அழைத்து கடந்த 04.03.2022 அன்று கூட்டம் நடத்தப்பட்டு வாடகை நிலுவை வைத்திருக்கும் அனைத்து குத்தகைதாரர்களும் 31.03.2022–க்குள் தங்களின் வாடகை நிலுவையை செலுத்த வேண்டும் என்றும், தவறினால் கடைகள் மூடி முத்திரையிடப்படும் என அறிவிப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து நகராட்சி பணியாளர்கள், சம்பந்தப்பட்ட கடைகளுக்கு சென்று வலியுறுத்தி வாடகை நிலுவை தொகை வசூல் செய்யப்பட்டது. இதன்மூலம் நகராட்சி ஆணையர் பதவியேற்ற மூன்று மாதகாலத்தில் நிலுவையிலிருந்த வாடகை தொகையில் ரூ.1,11,74,355/– தொகை வசூல் செய்யப்பட்டது. மேலும், வாடகை பாக்கி நிலுவை வைத்திருந்த மற்ற கடைகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் உத்தரவின் பேரில் மூடி முத்திரையிடப்பட்டது.

இதன் பின்னர், மேற்காணும் நந்திவரம் –கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான மூன்று ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் 9 ஆண்டு குத்தகை இனங்கள் நீண்ட காலமாக ஏலம் விடப்படாததால் நகராட்சிக்கு குறைந்த அளவு வாடகை வருவதால் நகராட்சி கடைகளை

பொது ஏலம்விட முடிவு செய்து இது தொடர்பாக நகர்மன்றத்தில் 31.03.2022 அன்று மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு முறையாக 21.07.2022 நாளியிடப்பட்ட தினசரி நாளிதழ் மற்றும் நகராட்சி விளம்பர பலகை மற்றும் 28.07.2022 நாளிடப்பட்ட மாவட்ட செய்தி மலரில், சரியான முறையில் பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் செலுத்த வேண்டிய டேவணி தொகை / பொறுப்பு தொகை/ ஏலம் கோரும் நாள் ஆகியவை விளம்பரப்படுத்தப்பட்டது. இது தவிர நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் ஏற்கனவே குத்தகை எடுத்த கடைகளின் உரிமையாளர்களுக்கும் ஏல அறிவிப்புகள் வழங்கப்பட்டன. மேலும் ஏற்கனவே வாடகை நிலுவை வைத்திருப்பவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள முடியாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டதால் ஏல நடவடிக்கையின் போது ரூ.20,07,203/– நிலுவை தொகை பொது ஏலத்தின்போது வசூலாகியுள்ளது.

மேற்காணும் குத்தகை இனங்கள் 03.08.2022, 04.08.2022 மற்றும் 05.08.2022 ஆகிய நாட்களில் பொது ஏலம் விடப்பட்டதில் நகராட்சிக்கு சொந்தமான 3 ஆண்டு குத்தகை இனங்களில் இரண்டு இனங்கள் ஏலம் சென்றது. மீதமுள்ள மூன்று இனங்கள் ஏலத்தொகை அதிகமாக இருப்பதாக கூறி ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை. அதேபோன்று 9 ஆண்டு குத்தகை இனங்களில் உள்ள 168 கடைகளில் மீன் கடைகள் உட்பட 141 கடைகள் ஏலம் சென்றது மீதமுள்ள 27 கடைகள் ஏலத்தொகை அதிகமாக இருப்பதாக கூறி ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை. மேலும், மேற்காணும் கடைகளை ஏலம் எடுத்த குத்தகைதாரர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 01.09.2022 முதல் செயல்பட பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேலும், ஏலம் போகாத இனங்களால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்க, மேற்காணும் கடைகளை உள்ளூர் சந்தை விலை அல்லது பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்துள்ள வாடகை விலை அடிப்படையில், அடிப்படை ஏலத்தொகை நிர்ணயம் செய்து மீண்டும் ஏலம் விட நகர்மன்றத்தில் தனியாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகர்மன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்காணும் ஏலம் போகாத இனங்களுக்கு முறையான விளம்பர அறிவிப்பு செய்து மீண்டும் ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தற்போதைய ஆணையர், நந்திவரம் –கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையராக பதவியேற்ற இரண்டாவது நாளே வார்டு மறுவரையறை கருத்து கேட்பு கூட்டம் தாம்பரத்தில் நடந்த போது புகார்தாரர் திரு.E.கோவிந்தராஜன் என்பவர் வார்டு மறுவரையறை தொடர்பான கருத்து தெரிவிக்காமல், எவ்வித அனுபவமில்லாத நபரை நகராட்சி ஆணையராக ஏன் நியமித்தார்கள் என்று நகராட்சி நிர்வாக ஆணையாளர் முன்னிலையில் தன்னை மிரட்டும் தொனியில் புகார் அளித்தார். இதன் பின்னர் மனுதாரர் மீண்டும் நான்கு நாட்கள் கழித்து தன்னை அலுவலகத்தில் நேரில் சந்தித்து தன் மீது புகார் அளித்ததற்கு தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறி, இதற்கு முன்னர் இருந்த EO–க்கள் எனக்கு மாதம் 10,000/– ரூபாய் வழக்கமாக கவரில் போட்டுத் தருவார்கள் நான் அவர்களை எந்த தொந்தரவும் செய்யமாட்டேன் என்றார். அவ்வாறு தன்னால் தர இயலாது என தெரிவித்து உங்களுக்கு நகராட்சியால் என்ன பொது காரியம் செய்ய வேண்டும் என்றும், ஏதேனும் அடிப்படை வசதி தொடர்பான குறைபாடு இருந்தால் அதனை சுட்டி காட்டினால் உடனே நிறைவேற்றி தருவேன் என்றும் மனுதாரரிடம் தெரிவித்தேன். இது தொடர்பாக மீண்டும் அவர் எனக்கு வாட்ஸ் ஆப் காலில் அழைத்து இரண்டு முறை பணம் கேட்டு பேசினார். அவ்வாறு பணம் தர இயலாது என்று கூறிவிட்டேன். இதனால் காழ்புணர்ச்சியால் எவ்வித ஆதாரமுமின்றி இதுபோன்று போலியான / பொய்யான புகார்களை கூறி நகராட்சி ஆணையாளரான எனது நற்பெயருக்கு

களங்கம் விளைவிக்கும் வகையில் தனது பெயரை போட்டு நோட்டிஸ் அடித்து எங்களது அலுவலகம் மட்டுமின்றி அருகிலுள்ள நகராட்சி அலுவலகம் மற்றும் வாட்ஸ்ஆப் போன்ற சமூக வலைதளத்தின் மூலம் இதுபோன்று அவதூறு பரப்பி வருகிறார் என்ற விவரத்தினை தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உள்நோக்கத்தோடு எவ்வித ஆதாரமுமின்றி போலியான புகார் கூறி சமர்ப்பித்துள்ள இவரது முறைமன்ற மனுவினை தள்ளுபடி செய்யுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையரும் 19.12.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.E.கோவிந்தராஜன் 19.12.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"நந்திவரம் –கூடுவாஞ்சேரி நகராட்சியில், நகராட்சி கடைகள் ஏலம் விடுவதில் பெரும் முறைகேடு நடைபெற்றுள்ளது. கடைகளை ஏலம் விடாமலேயே ஏலம் விட்டதாக தெரிவித்து, ஏற்கனவே 15 – 20 ஆண்டுகள்வரை கடை நடத்திவருபவர்களுக்கே மீண்டும் கடைகளை நடத்த அனுமதித்துள்ளனர். இதுபோன்று நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் 166 கடைகளை நடத்துவதற்கும், மேலும் அந்நகராட்சியில் வீடுகளை கட்ட புதிய பிளான் கொடுப்பதில் ஆணையர் இலஞ்சம் பெற்றுள்ளார். இவருக்கு உடந்தையாக துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் உள்ளனர். அங்கு நடைபெறும் டெண்டர் ஏதும் முறையாக நடைபெறவில்லை. பத்திரிகை விளம்பரமோ அல்லது தகவல் பலகையில் விளம்பரமோ டெண்டர் குறித்து விளம்பரம் செய்யப்படவில்லை.

அங்கு நடைபெறும் மீன் கடை நடத்துபவர்களிடம் பத்தாயிரம் ரூபாயும், மற்ற கடைக்காரர்களிடம் 25 ஆயிரம் ரூபாயும் ஆணையர் திரு. இளம்பரிதி வாங்கியுள்ளார். மேற்கண்ட முறைகேடுகள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இணை இயக்குநருக்கு புகார்கள் அனுப்பப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடைகள் ஏலம் விடப்பட்டது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல்கள் கேட்டும் ஆணையர் விவரங்களை தர மறுத்துவிட்டார்.

எனவே, மேற்கண்ட கடைகளை ஏலம் விடுவதில் நடைபெற்ற முறைகேடுகளை விசாரித்திடவும், டெண்டர் முறைப்படி நடைபெறவும் மேலும் முறைகேடு செய்துள்ள ஆணையர் மற்றும் பணியாளர்கள் திரு. விஜய் ஆனந்த், திரு. ராஜ்குமார், திரு. பாலா என்கின்ற சீனிவாசன் மற்றும் திருமதி. ஹேமலதா ஆகியோர் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்று என்னால் இம்முறை மன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள எனது 18.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையாளர் திரு. மு. இளம்பரிதி மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் மேலாளராக பணியாற்றும் திரு. ஆர். ஏழுமலை மற்றும் திருமதி. C. ஹேமலதா ஆகியோர் 19.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

''நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் 166 கடைகளுக்கு ஏலம் விடுவதற்கு தமிழ் முரசு என்கின்ற நாளிதழில் 21.7.2022 அன்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலரில் 28.7.2022 அன்றும் மேலும் பொது ஏலம் தொடர்பான அறிவிப்பினை நகராட்சி அலுவலக விளம்பரப் பலகையிலும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து, அதற்கான விளம்பர நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே குத்தகை எடுத்த கடைகளின் உரிமையாளர்களுக்கும் ஏல அறிவிப்புகள் வழங்கப்பட்டு முறையாக ஏலம் விடப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். அதே போன்று அங்கு நடைபெறும் மீன் கடைகளுக்கும் முறையாக ஏலம் விடப்பட்டுள்ளது என்பதையும், அங்கு உள்ள கடைகளுக்கு வருடந்தோறும் 5 சதவீதம் உயர்த்தி வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதையும் எனவே மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள புகாரில் எவ்வித உண்மையும் இல்லை என்பதையும், காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும், மாதந்தோறும் நகராட்சியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகை தனக்கு அளிக்கப்படவேண்டும் எனவும் அப்படி அளிக்கப்பட்டால், தான் எவ்வித தொந்தரவிலும் ஈடுபட மாட்டேன் எனவும் தெரிவித்திருந்தார். மேற்கண்ட தொகை நகராட்சியால் அளிக்கப்பட இயலாது எனவும் நகராட்சியில் ஏதேனும் பொதுவான கோரிக்கை இருந்தால் அதனை நிவர்த்தி செய்யப்படும் எனவும் எங்களால் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் நகராட்சி ஆணையர் மற்றும் பணியாளர்களான எங்களின் மீது அவதூறாக செய்தி தெரிவித்து சுவரொட்டியும் ஆங்காங்கே அடித்துள்ளார்; இதுபோன்று நகராட்சியினர் குறித்து மட்டுமல்லாமல் மின் வாரியம், சார் பதிவாளர் அலுவலகம் போன்ற அரசு அலுவலகங்கள் குறித்தும் உள்நோக்கத்துடனும், பணம் பறிக்கும் நோக்கத்துடனும் செயல்பட்டு வருகிறார் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து அதன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் மேற்கண்ட 166 கடைகளில், தற்போது ஏலம் விடப்பட்ட 145 கடைகளுக்கு, முன்னர் விடப்பட்ட ஏலத் தொகை, தற்போது விடப்பட்டுள்ள ஏலத்தொகை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு மற்றும் ஏலம் சம்பந்தமான அனைத்து கோப்புகளின் நகல்களையும் இன்னும் ஓரிரு நாட்களில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் என தெரிவித்துக்கொள்கிறோம். மனுதாரர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரப்படும் விவரங்களை இனி உடனுக்குடன் மனுதாரர்களுக்கு அளிக்கப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் உறுதியளிக்கிறோம்.

மேலும் நகராட்சி ஆணையரான எனது 15.12.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) மேலும், நந்திவரம்– கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர் 03.01.2023 நாளிட்ட கடிதத்தில், வாக்குமூலத்தின்போது தெரிவித்துள்ளபடி கீழ்காணும் தகவல்களை அளித்துள்ளார்:–

"19.12.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரில் ஆஜராகி வாக்குமூலம் தெரிவித்தபோது, நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான கடைகளில் 141 கடைகள் ஏலம் சென்றது என்பதற்கு பதிலாக 145 கடைகள் ஏலம் சென்றதாக மூன்று ஆண்டு குத்தகை இனங்களையும் சேர்த்து தவறுதலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 141 கடைகளுக்கான வாடகைத் தொகை மற்றும் சென்ற ஆண்டுடனான ஒப்பீட்டு பட்டியல் மாண்புமிகு முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர், மேலாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரியைச் சார்ந்த மனுதாரர் திரு.E.கோவிந்தராஜன் என்பவர் தனது முறையீட்டு மனுவில், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான கடைகள், மீன்சந்தை ஆகியவற்றை எவ்வித அறிவிப்புகள் / விளம்பரமின்றி நகராட்சி ஆணையாளரால் தன்னிச்சையாக விதிமீறி ஏலம் விடப்பட்டுள்ளது என்றும், கடைகளை ஏலம் விடாமலேயே ஏலம் விடப்பட்டதாக அறிவித்து சுமார் 15–20 ஆண்டுகளாக கடைகள் நடத்தும் நபர்களுக்கே ஒதுக்கீடு செய்து; நகராட்சிப் பணியாளர்களின் மூலம் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களிடமிருந்தும் மற்றும் நகராட்சியில் வீடு கட்டுவதற்காக வரைபட அனுமதி கோருபவர்களிடமிருந்தும், நகராட்சி பணியாளர்களின் துணையுடன் நகராட்சி ஆணையர் கையூட்டு பெற்று வருகிறார். மேலும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மனுக்களுக்கும் சரியான தகவல்களை நகராட்சி ஆணையர் அளிப்பதில்லை என புகாராக தெரிவித்துள்ளார்.

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான 166 கடைகளுள், 141 கடைகளை ஏலம் விடுவதற்கு நகராட்சியின் நகர்மன்றத்தில் 31.03.2022 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஏலம் தொடர்பான விளம்பரத்தினை 21.07.2022 நாளிட்ட தினசரி நாளிதழிலும் மற்றும் 28.07.2022 நாளிடப்பட்ட செங்கல்பட்டு மாவட்ட செய்தி மலரிலும் விளம்பரப்படுத்தப்பட்டு, 03.08.2022, 04.08.2022 மற்றும் 05.08.2022 ஆகிய நாட்களில் 141 கடைகள் ஏலம் விடப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. மேலும், மேற்காணும் அறிவிப்பினை நகராட்சி அலுவலக விளம்பரப் பலகையிலும், நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் ஏற்கனவே குத்தகை எடுத்த கடை உரிமையாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஆணையரின் அறிக்கையின் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும் ஆணையர் தனது 03.01.2023 நாளிட்ட அறிக்கையில், தற்போது 141 கடைகள் ஏலத்திற்கு விடும் முன்பு, 2021–22 ஆண்டுக்கான மேற்காணும் கடைகளிலிருந்து வரப்பெற்ற ஆண்டு மொத்த வாடகை தொகை ரூ 41,59,272/– எனவும், தற்போது ஏலம் விடப்பட்டபின் 2022–23 ஆம் ஆண்டிற்கான மொத்த வாடகைத் தொகை ரூ 60,60,600/– எனவும் தெரிவித்து, இதனால் நகராட்சிக்கு கடைகளின் மூலம் கிடைக்கப் பெறும் வாடகைத் தொகை இனத்தில் சென்ற 2021–22 ஆம் ஆண்டை காட்டிலும் 45.71% கூடுதலாக நகராட்சிக்கு வருமானம் கிடைக்கும் என்பதையும், அதே போல் 166 கடைகளுக்கான 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஏலத்தில் வசூலிக்கப்பட்டு இருப்பிலிருந்த டேவணி தொகை ரூ 70,70,498/–லிருந்து 141 கடைகள் தற்போது ஏலம் விடப்பட்டதால் டேவணித் தொகை ரூ 1,18,76,000/– ஆக உயர்ந்துள்ளதன் மூலம், இவ்வினத்தில் 67.96% வருமான உயர்வு நகராட்சிக்கு கிடைத்துள்ளது என்பதையும் ஆணையரின் அறிக்கையின் மூலம் அறியமுடிகிறது.

மனுதாரர் தனது புகாரினை நிரூபிக்கும் வகையில் போதிய ஆதார ஆவணங்களை இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பிக்காத நிலையில், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

இருப்பினும், பொது மக்களிடமிருந்து நகராட்சி தொடர்பான தகவல்களை அளிக்கக் கோரும் நேர்வுகளில், உரிய தகவல்களை காலதாமதமின்றி உடனுக்குடன் அளித்திட வேண்டும் என்றும், மாறாக, தகவல்களை நகராட்சியில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம் என தெரிவித்த நகராட்சி ஆணையரின் செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. நகராட்சி நிர்வாக ஆணையம் இதுகுறித்து ஆணையர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது. இயக்குநரகம்

Transparency and outspoken conduct on the part of the Commissioner would avert such petitions like this one where the Commissioner had advised the petitioner to come to office for clarifications on the issues raised by him. This approach is negative, perverse, and out of the rule book. This act of the respondent is censured by this forum.

2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. E.கோவிந்தராஜன்,
கதவு எண்.10, திருவீதியம்மன் கோயில் தெரு,
கிருஷ்ணாபுரம், நந்திவரம் – கூடுவாஞ்சேரி – 603 202,
செங்கல்பட்டு மாவட்டம்.

2) ஆணையாளர், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி – 603 202
செங்கல்பட்டு மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்:–
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

23/01/23

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

19/01/23